www.StudyGuideIndia.com

A.I – Sep – 2010

6751

Register Number

# தமிழ்

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

1. கடின பதத்திற்குப் பொருள் தருக : $8 \times \frac{1}{2} = 4$

அ) மேதினி ஆ) மறவர்

இ) எழில் ஈ) கேணி

உ) ஒற்கம் ஊ) ஈசன்

எ) அமரர் ஏ) இலயை.

2. சேர்த்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) நன்மை + இயல்பு ஆ) ஆறு + வெள்ளம்.

3. பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) தருமநெறி ஆ) கையேந்தி

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக : $3 \times 1 = 3$

அ) கவலையோடு

ஆ) பங்கிட்டு

இ) கட்டுப்பாடு

5. எவையேனும் இரண்டினைப் பிழை திருத்தம் செய்க : $2 \times 1 = 2$

அ) அப்பா நாளை வந்தார்

ஆ) ஆடுகள் புல்லை மேய்ந்தது

இ) நானும் அவனும் வந்தேன்.

6. வினைப் பகுதி தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) சிந்தித்து ஆ) பெருகும்.

7. தொழிற் பெயர் தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) வழிபடு ஆ) ஊட்டு.

8. ஆசிரியர் பாடம் நடத்தினார்.

( செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக ) 2

9. அண்ணா பிறந்தது காஞ்சிபுரமன்றோ ?

( செய்தி வாக்கியமாக மாற்றுக ) 2

[ Turn over

10. தருமம் செய்யாவிட்டால் புண்ணியம் விளையாது.

( உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக ) 2

11. கம்பன் கவியைக் கற்கிறேன். மனம் மகிழ்கிறேன்.

( இறந்தகால வாக்கியமாக மாற்றுக ) 2

12. பாரதியார் பெண்ணடிமையைக் கண்டார். உள்ளம் குமுறினார். புதுமைப் பெண்ணைப் படைத்தார்.

( ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக ) 2

13. எவையேனும் **இரண்டனுக்கு** உறுப்பிலக்கணம் தருக : 2 × 1 = 2

அ) படைத்த

ஆ) மடிந்து

இ) பிறந்தீர்

ஈ) அயர்வார்

14. சீர் பிரித்து அலகிட்டு வாய்பாடு கூறுக :

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே

கல்லார்கண் பட்ட திரு.

15. எவையேனும் **நான்கு** சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக : 4 × 1 = 4

அ) உவப்ப

ஆ) மின்னல்

இ) முதுமக்கள்

ஈ) இழந்து

உ) ஆடுகுதிரை

ஊ) வளையாத.

16. எவையேனும் **ஆறு** இலக்கண வினாக்களுக்கு விடையளிக்க : 6 × 2 = 12

அ) உவமையணி என்றால் என்ன ? சான்றுடன் விளக்குக.

ஆ) யாப்பின் உறுப்புகள் யாவை ?

இ) வல்லினம் மிகும் இடங்கள் நான்கினைக் கூறுக.

ஈ) அகத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

உ) இரண்டாம் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும் ?

ஊ) தன்வினை என்றால் என்ன ? சான்று தருக.

எ) வேற்றுமைத் தொகையை விவரி.

ஏ) இடைச் சொல் என்றால் என்ன ? சான்று தருக.

17. அடி பிறழாமல் எழுதுக :

அ) 'பூத்தாலும் ...' எனத் தொடங்கும் பழமொழிப்பாடல். 4

ஆ) 'ஓதலினும் ...' எனத் தொடங்கும் பாடல். 4

இ) 'முகநக ...' எனத் தொடங்கும் திருக்குறள். 2

www.StudyGuideIndia.com

18. எவையேனும் இரண்டு செய்யுட்களுக்குத் திரண்ட கருத்து எழுதுக : 2 × 2 = 4

அ) 'எம்கோமான்தனை விடுவேன்
அல்லேன் என்று இராப்பகலும்
கொங்குஆர் பல்மலர் கொண்டு
குளிர்புனல் கொண்டு அருச்சிப்பார்'

ஆ) 'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்'

இ) 'அன்புதான் கடவுள் என்றே
அனுதினமும் உணர்த்தி வந்தார்
அன்புதான் பகைமைத் தீயை
அணைத்திடும் வெள்ளம் என்றார்'

19. கீழ்வரும் பாடலின் பொருள் தெளிந்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி. 4 × 1 = 4

'ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை சாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம் மகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒரு நிகர்
சமானமாக வாழ்வமே'.

வினாக்கள் :

அ) சாதியில் இல்லாதது எது ?

ஆ) இந்தியாவில் என்ன இல்லை ?

இ) எய்த வேண்டுவது யாது ?

ஈ) மனிதர் எப்படி வாழ வேண்டும் ?

20. ஏதேனும் ஒன்றினை இடஞ்சுட்டி விளக்குக : 1 × 3 = 3

அ) ''கேணி நீர்ப்படு சொறித் தவளை கூப்பிடுகுதே''

1. இவ்வரி இடம்பெறும் இலக்கியம் யாது ?
2. 'கேணி' என்னும் சொல்லின் பொருள் யாது ?
3. தவளை கத்துதலின் காரணம் யாது ?

அல்லது



www.StudyGuideIndia.com

ஆ) "இறுதியில் அவன் செய்த அதர்மம் அவனை அழித்தது"

1. அவன் என்பது யாரைக் குறிக்கும் ?
2. அவன் செய்த அதர்மம் யாது ?
3. இறுதியில் அவனை அழித்தது யாது ?

21. எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்க. 6 × 2 = 12

அ) மாறன் செய்த சூழ்ச்சி யாது ?

ஆ) நல்லநாடு அமைய ஔவையார் கூறும் கருத்து யாது ?

இ) எது தோடர்களின் செல்வமாகக் கருதப்படுகிறது ?

ஈ) மனம் பண்படுவதற்கு வழி என்ன ?

உ) தாய் தன் மக்கட்குச் செய்யும் கடமையே மேலானது. எதனால் ?

ஊ) தொண்டை நாடு - குறிப்பு வரைக.

எ) சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகள் யாவை ?

ஏ) அதர்மம் செய்பவனின் நிலை என்ன ?

22. ஏதேனும் **ஒன்றனுக்கு** விரிவான விடையளி. 7

அ) தமிழின் சிறப்பு எங்ஙனம் விளக்கப்படுகின்றது ?

ஆ) பைக்கார நதியின் வரலாற்றைப் பற்றி நீவிர் அறியும் செய்தி யாது ?

இ) தேசிய ஒருமைப்பாடு பற்றிய பாரதியார் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

23. ஏதேனும் **ஒரு** தலைப்பிற்குக் கட்டுரை வரைக. 5

அ) வரதட்சணைக் கொடுமை

ஆ) மாணவரும் பொதுநலத் தொண்டும்

இ) தொலைக் காட்சியும் அதன் பயனும்.

24. ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக : 5

(கடிதத்தில் நும் பெயர், பதிவெண் மற்றும் முகவரி ஆகியவற்றை எழுதுதல் கூடாது.)

அ) இன்பச் சுற்றுலா சென்று வந்தது குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

*அல்லது*

ஆ) நும் ஊருக்குப் பேருந்து விடுதல் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

*அல்லது*

இ) மழைநீர் தேங்கி நிற்பது குறித்து மாநகராட்சி அதிகாரிக்குப் புகார்க் கடிதம் எழுதுக.

25. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்றொடர்களுக்கு மொழியாக்கம் தருக : 1 + 1 + 2

அ) A Crying child will get milk.

ஆ) Health is wealth.

இ) Water is important for everyone. We cannot live without water. Water is found in ponds, lakes, rivers and seas. This water is impure. It contains different salts.

www.StudyGuideIndia.com